# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/65 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/65 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் ஏ. டி. சுசில் பிரேமஜயந்த் ஆகிய நான், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகவிருப்பதாகக் கருத்தப்படுகின்ற இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும்) 2007, ஒற்றோபர் 09 ஆந் திகதிய 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை பின்வருமாறு திருத்துகின்றேன்:-

(1) 2022 ஒகத்து 16 ஆந் திகதிய 2293/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதுமான) சொல்லப்பட்ட அட்டவணையில் நிரல் I இல் காணப்படுகின்ற “சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்” என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்;

“சேர் பொன்னம்பலம் இராமநாதன் கட்புலக் கலைகள் மற்றும் அரங்காற்று பீடம்”

(2) அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்” என்னும் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய பீடத்தையும் கற்கைத்துறைகளையும் அதனது நிரல் II இலுள்ள அதனது நேரொத்ளயும் சேர்ப்பதன் மூலமும்;


1A - PG 6790 — 455 (2024/07)



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| சித்த மருத்துவ பீடம் | 1. மூலத்தத்துவத் துறை<br>2. குணபாடத் துறை<br>3. நோய்நாடல் சிகிச்சைத் துறை<br>4. குழந்தை மற்றும் மகளிர் மருத்துவத் துறை<br>5. சிரரோகம் மற்றும் அறுவை மருத்துவத் துறை<br>6. சமூகநல மருத்துவத் துறை<br>7. மனித உயிரியல் துறை<br>8. நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவத் துறை" |

(3) ஏதேனும் அறிவிப்பு, அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல், உடன்படிக்கை, கட்டளை, படிவம் அல்லது வேறு ஆவணங்களில் "சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்" பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் "சேர் எனப்தற்கான குறிப்பீடொன்றாக வாசித்து பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

"சேர் பொன்னம்பலம் இராமநாதன் கட்புலக் கலைகள் மற்றும் அரங்காற்று பீடம்"

(4) 2022 ஆகஸ்ட் 16 ஆந்திகதிய 2293/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின் பயனாக இக்கட்டளை பயனுக்குவரும் தேதிக்கு முன்னதாக சொல்லப்பட்ட "சிறி பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்து மற்றும் கட்புலக் கலைகள் பீடம்" பிரயோகிக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் புரியப்பட ஏதேனும் தத்துவம், கடமை மற்றும் பணி எல்லா நோக்கத்திற்கும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் கட்புலக் கலைகள் மற்றும் அரங்காற்று பீடத்தினால் வலிதாக பிரயோகிக்கப்பட்டிருப்பட்டிருப்பதாகவும், நிறைவேற்றுப்பட்டிருப்பதாகவும், புரியப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, யூலை 25.

EOG 07 - 0267